[1982 மார்ச் 9

நகராட்சியில் பணிபுரியும் மின்சாரத்துறை ஊழியர்களுக்கான குடும்ப நலப்பாதுகாப்புத் திட்டம்.

* வினா எண். 429—திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாநகராட்சி, நகராட்சிகளில் பணிபுரியும் மின்சார இலாகா ஊழியர்கட்கு குடும்பநலப் பாதுகாப்புத் திட்டம் (பணிக்காலத்தில் மரணமடைந்தால் ரூபாய் 10,000) அமுல் படுத்த அரசுக்கு உத்தேசமுண்டா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு எம். சின்னசாமி : பேரவைத் தலைவரவர்களே, அரசின் பரிசீலனையில் உள்ளதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். அந்தப் பரிசீலனை எப்பொழுது முடிவடையும்? அப்படிக் கொடுப்பதாக இருந்தால் எந்தத் தேதியிலிருந்து கொடுக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, மாநகராட்சி, நகராட்சிகளில் பணிபுரியும் மின்சார இலாக்கா ஊழியர்கட்குக் குடும்பநலப் பாதுகாப்புத் திட்டத்தின் அடிப்படையில் 10,000 ரூபாய் கொடுக்கப்பட வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். இது கடந்த 1-1-74—லிருந்து கொடுக்கப்படுகிறது. ஆனால் இப்படிப்பட்ட ஊழியர்களுக்குக் கடந்த 1975-லேயிருந்து கூட்டு ஆயுள் காப்பீட்டுத் திட்டம் - குரூப் இன்ஷ்யூரன்ஸ் ஸ்கீம் — அவர்களுக்குக் கொண்டு வரப்பட்டு அதிலே அவர்கள் பலனடையும் சூழ்நிலையிருக்கிறது. ஆனாலும் 10,000 ரூபாய் அவர்களுக்கும் தனியாகக் கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கை அரசினுடைய பரிசீலனையிலேயிருக்கிறது. விரைவாக நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. பாபு ஜனார்த்தனன் : பேரவைத் தலைவரவர்களே, பரிசீலனையில் உள்ளது பரிசீலனையில் உள்ளது என்று பல பிரச்னைகளுக்கு அமைச்சர்களின் பதில் உள்ளது. அதற்கு ஏதாவது வரைமுறை உண்டா? இந்த நேரத்தில், இந்த வருஷத்தில், இந்தக் காலத்திற்குள் முடியும் என்ற வரைமுறையை அளிக்க வேண்டுமென்று சபாநாயகர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன், அமைச்சர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வேண்டுகோளுக்கு நன்றி.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மின்சார ஊழியர்களுக்கு விபத்துக் காலத்தில் இறந்தால் 10,000 ரூபாய் கொடுப்பது என்பது பரிசீலனையில்

1982 மார்ச் 9]

உள்ளது என்று அமைச்சரவர்கள் சொல்கிறார்கள். ஓய்வு பெற்றாலும் பத்தாயிரம் ரூபாய் கிடைக்க இந்தப் பரிசீலனையின் இறுதியில் முடிவு இருக்குமா? இதவும் அந்தப் பரிசீலனையோடு இணைத்துப் பார்க்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப குழந்தைவேலு : தலைவரவர்களே, இப்பொழுது தான் பரிசீலனையே நடந்து கொண்டிருக்கிறது என்பதைச் சொன்னேன். பரிசீலனைக்கு முன்னால் திட்ட வட்டமான அறிவிப்பையே நம்முடைய உறுப்பினர்கள் கேட்கிறார்கள். அப்படி ஒரு அறிவிப்பைக் கொடுத்துவிட்டால் பரிசீலனையே தேவையில்லை. பரிசீலித்து முடிவெடுக்கலாம்.

சென்னை இராயபுரம் தொகுதியிலுள்ள லெவல்கிராஸிங்

*வினா எண். 430 திரு. ப. பொன்னுரங்கம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை இராயபுரம் தொகுதியில் உள்ள இராபின்சன் பூங்காவுக்கும் அரசினர் ஸ்டான்லி மருந்துவமனைக்கும் இடையில் உள்ள லெவல்கிராஸிங் அடிக்கடி மூடப்படுவதால் பொது மக்களுக்கு ஏற்படும் இன்னல்களை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில் அதனைக்களைய அரசு எடுக்கவிருக்கும் நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) & (ஆ) சென்னை இராயபுரம் தொகுதியில் உள்ள இராபின்சன் பூங்காவுக்கும் அரசினர் ஸ்டான்லி மருத்துவமனைக்கும் இடையில் உள்ள லெவல்கிராஸிங் அடிக்கடி மூடப்படுவதால் பொதுமக்களுக்கு ஏற்படும் இன்னல்களை அகற்ற மேற்குறிப்பிட்ட இடத்தில் வரையறுக்கப்பட்ட சுரங்கப்பாதை கட்ட திட்டமிடப்பட்டு சென்னை மாநகராட்சியின் ஆய்வில் உள்ளது.

திரு. ப. பொன்னுரங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, இத்துறை அமைச்சருக்குப்பக்கத்திலே அமர்ந்திருக்கிற மாண்புமிகு திரு காளிமுத்து அவர்கள் இந்த இலாகாவின் பொறுப்பை ஏற்றிருந்தபோது இதே மாதிரி தான் சொன்னார். 2, 2½ ஆண்டுகள் போய்விட்டன. இது ரொம்ப முக்கியமான பிரச்சனை வியாபாரிகள், அலுவலகத்திற்குச் செல்பவர்கள், மற்றவர்கள் எல்லாம்கூட ரொம்ப அவதிக்குள்ளாகிறார்கள். அது மட்டும் அல்ல, இந்த லெவல் கிராசிங்குக்கு வடக்குப் பக்கத்திலே ஆர். எஸ். ஆர். எம். ஆஸ்பிட்டல் இருக்கிறது—மாண்புமிகு